இந்திய உச்சநீதிமன்றம்

செமீனோவா இந்தியா லிட் மற்றும் ஒருவர்

எதிர்

பஞ்சாப் மாநிலம் மற்றும் பலர்

மேல்முறையீடு (குற்றவியல்) 750 of 2021.

தீர்ப்பு தேதி: 04.08.2021

மாண்புமிகு நீதியரசர் திரு. நவீன் சின்ஹா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர்.சுபாஷ் ரெட்டி

பூச்சிக்கொல்லி மருந்துகள் சட்டம் 1968: பிரிவு 33 – தவறான தொழிற்சின்னம் குற்றச்சாட்டு – மேல்முறையீட்டாளர் – தயாரிப்பு நிறுவனம் மற்றும் மேல்முறையீட்டாளர் – நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் இதர எதிரிக்கு எதிராக பிரிவுகள் 3(k) (i), 17, 18 மற்றும் 33–ன் கீழ் குற்ற முறையீடு–உயர்நீதிமன்றம் குற்றமுறையீட்டை ரத்து செய்யக் கோரிய மனுவை தள்ளுபடி செய்தது – இந்த மேல்முறையீட்டில் மேல்முறையீட்டாளர்கள் நிறுவனத்தால் தயாரிக்கக்கூடிய பூச்சிக்கொல்லி மருந்துகளின் தரத்தை பராமரிப்பதற்கு பொறுப்பாளர் மற்றும் பொறுப்பான அதிகாரியாக மேலாளர் நியமனம் செய்யப்பட்டு அதைப் பொறுத்து எதிர்மனுதாரர்களிடம் நிறுவனத்தின் கூட்டத்தில் இயற்றப்பட்ட

தீர்மானத்தையும் இணைத்து, உத்தரவாத கடிதம் தாக்கல் செய்துள்ளார்கள். நடைபெற்றது: அவ்வாறு உறுதிமொழி கொடுத்ததைப் பற்றி தகராறு இல்லை – யார் அந்த நிறுவனத்தின் வியாபாரத்திற்கு பொறுப்பாளராக இருந்தாரோ அல்லது பொறுப்பான நபராக இருந்தாரோ அவரும் அவரோடு சேர்ந்து அந்த நிறுவனமும் மட்டுமே குற்றம் இழைத்தவர்களாக கருதப்பட வேண்டும் எனவும், அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என அந்த சட்டத்தின் குறிப்பிட்ட பிரிவுகள் கூறுகின்றன – அதன்படி, இந்த நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் தெளிவற்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அந்த நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக இருப்பதனாலேயே நிறுவனத்தின் வியாபார நடவடிக்கைகள், தரக் கட்டுப்பாடு முதலியவற்றிக்கெல்லாம் மொத்தமாக பொறுப்பாளர் என்ற தெளிவற்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவரை குற்ற வழக்கீட்டிற்கு உட்படுத்த முடியாது – நிறுவனத்தின் மற்ற அனைத்து நியமனம் செய்யப்பட்ட/பொறுப்பான நபர்கள் ஏற்கனவே இந்த குற்ற முறையீட்டில் எதிரியாக உள்ளனர் என்பதால் இந்த மேல்முறையீட்டாளர் – மேலாண்மை இயக்குநருக்கு எதிராக சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை குற்ற வழக்கீடு செய்வதற்கு அடிப்படை எதுவும் இல்லை – எனினும், இந்த மேல்முறையீட்டாளர் – நிறுவனத்திற்கு எதிராக உள்ள வழக்கு நடவடிக்கைகளை ரத்து செய்வதற்கு இந்த நிலையில் காரணி எதுவும் இல்லை.

குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் 1973: பிரிவு 202 – இந்த குற்ற முறையீட்டின் அடிப்படையிலான குற்றத்தை புலன் கொள்ளும் முன்பு கற்றறிந்த நீதித்துறை நடுவர் பூச்சிக் கொல்லி மருந்துகள் சட்டம்

பிரிவு 24 (4) மற்றும் குற்றவிசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 202 ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றவில்லை மற்றும் மேல்முறையீட்டாளர்கள் நீதித்துறை நடுவரின் ஆள்வரைக்குட்பட்டு வசிக்கவில்லை என்றபோதிலும், அவர் முறையான விசாரணையின்றியும், புலனாய்வுக்கு உத்தரவிடாமலும், குற்றத்தை புலன் கொண்டுள்ளார் – நடைபெற்றது: சட்டமன்றம், அதன் அறிவாற்றலால் பொது ஊழியரை வெவ்வேறு பீடத்தில் வைத்திருப்பது குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 202ன் விதிவிலக்கின் மூலம் தெரிய வருகிறது – குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதித்துறை நடுவரின் ஆள்வரை அதிகார வரம்பிற்கு வெளியே வசித்து வரும் வழக்குகளில், வழக்கை புலன் கொள்ளும் முன்பு மேற்கொள்ளப்படும் விசாரணை/புலன் விசாரணை ஆகியவற்றின் நோக்கமே, தேவையின்றி அப்பாவிகள் துன்புறுத்தப்படகூடாது என்பதை உறுதிபடுத்துவதாகும் – குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 200ன் விதிவிலக்கின்படி, பொது ஊழியர் தனது அலுவலக பணியை நிறைவேற்றும் பொருட்டு தாக்கல் செய்யும் குற்ற முறையீட்டினை பொறுத்து, நீதித்துறை நடுவர், அத்தகைய பொது ஊழியரிடம் வாக்குமூலம் பதிவு செய்யவேண்டிய அவசியம் இல்லை – மேலும், குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 293ன்படி அரசு அறிவியல் வல்லுநரின் அறிக்கை சாட்சியமாக அனுமதிக்கத்தக்கது – பொது ஊழியரால் குற்ற முறையீடு தாக்கல் செய்யும்பட்சத்தில், அவ்வாறான சாட்சிகளை விசாரிப்பதில் இருந்து குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் விலக்களித்துள்ளது–இந்த வழக்கில், பூச்சிக்கொல்லி மருந்துகள் சட்டம் 1968ன் கீழான அதிகாரத்தை செயல்படுத்தி 2ம் எதிர்மனுதாரர்/பொது ஊழியர், அரசு ஆய்வகங்களால் வழங்கப்பட்ட

அறிக்கைகள் உட்பட பல்வேறு ஆவணங்களையும் இணைத்து குற்ற முறையீட்டை தாக்கல் செய்துள்ளதால், ஆவணங்களால் ஆதரிக்கப்படும் அத்தகைய குற்ற முறையீட்டின் மீது நீதித்துறை நடுவர் அழைப்பாணை அனுப்புவதற்கு எப்போதும் அதிகாரம் உண்டு–எந்த சமயத்திலும், நீதித்துறை நடுவர் விசாரணை மேற்கொள்ளாமலும் புலன் விசாரணைக்கு உத்தரவிடாமலும், குற்றத்தை புலன் கொண்டுள்ளார் என்ற ஒரே காரணத்திற்காக வழக்கு நடவடிக்கை ரத்து செய்யப்படவேண்டும் என்று சமர்ப்பித்த வாதத்தில் எந்த தகுதியும் இல்லை – இந்த நிலையில், மேல்முறையீட்டாளர்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டது என்பதை காட்டவில்லை என்பதால், குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 482ன் கீழான அதிகாரத்தை செயல்படுத்தின வழக்கு நடவடிக்கைகளை ரத்து செய்வதற்கு அது ஒரு காரணி அல்ல–பூச்சிக்கொல்லிகள் மருந்து சட்டம் 1968: பிரிவுகள் 24(4), 33.

மேல்முறையீட்டை பகுதியாக அனுமதித்து இந்த நீதிமன்றம்.

நடைபெற்றது 1.1 இந்த சட்டத்தின்படி பிரிவு 33, நிறுவனங்களால் இழைக்கப்படும் குற்றங்கள் பற்றி கையாள்கிறது. இந்த சட்டத்தின் பிரிவு 33 (1)–ஐ வாசிக்கையில், ஒரு நிறுவனத்தால் எப்போதெல்லாம் இந்த சட்டத்தின் கீழான குற்றங்கள் இழைக்கப்படுகிறதோ, அந்த குற்றங்கள் இழைக்கப்படும்போது யார் அந்த நிறுவனத்தின் வியாபாரத்திற்கு பொறுப்பாளராக இருந்தாரோ அல்லது பொறுப்பான நபராக இருந்தாரோ அவரும் அவரோடு சேர்ந்து அந்த நிறுவனமும் குற்றம் இழைத்தவர்களாக கருதப்பட வேண்டும் எனவும், அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள்

மேற்கொண்டு அதன்படி தண்டிக்கப்படவேண்டும் என்பதையும் தெளிவுறச் செய்கிறது. இந்த வழக்கில், 1ம் மேல்முறையீட்டாளர் நிறுவனத்தின் சார்பாக, அந்த நிறுவனத்தினரால் தயாரிக்கப்படும் பூச்சிக் கொல்லி மருந்துகளின் தரத்தை பராமரிப்பதற்கும், இந்த சட்டத்தின் கீழ் எந்த குற்ற செயலும் நடைபெறாமல் தடுப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து எடுப்பதற்கு உண்டான அனைத்து அதிகாரங்களையும் செயல்படுத்துவதற்கும், நிறுவனத்திற்கான பொறுப்பாளராக ஸ்ரீ மதுகர்.ஆர்.கைட் என்பவரை நிறுவனத்தின் மேலாளராக நியமனம் செய்ததை காட்டக்கூடிய, நிறுவனத்தால் இயற்றப்பட்ட தீர்மானத்தை, 28.12.2012 அன்று 2ம் மேல்முறையீட்டாளர் – மேலாண்மை இயக்குநர் உத்திரவாதக் கடிதம் கொடுத்துள்ளதில் மாற்றுக் கருத்து இல்லை. அவ்வாறு உறுதிமொழி கொடுத்ததைப் பற்றி தகராறு இல்லை. நிறுவனங்களால் இழைக்கப்படும் குற்றங்களை கையாளும் இந்த சட்டத்தின் குறிப்பிட்ட பிரிவினை காண்கையில், அது நிறுவனத்தின் வியாபார நடவடிக்கைக்கான பொறுப்பான நபரின் மீது பொறுப்பை சுமத்துவதால், 2ம் மேல்முறையீட்டாளர் – மேலாண்மை இயக்குநர், இந்த நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக இருப்பதாலேயே, நிறுவனத்தின் வியாபார நடவடிக்கைகள், தரக் கட்டுப்பாடு முதலியவற்றிக்கெல்லாம் மொத்தமாக பொறுப்பாளர் என்ற பொத்தாம் பொதுவான மற்றும் தெளிவற்ற குற்றச்சாட்டுகளை வைப்பதனால், அதனடிப்படையில் அவரை குற்ற வழக்கீட்டிற்கு உட்படுத்த முடியாது. மேலாண்மை இயக்குநருக்கு எதிராக குற்ற வழக்கீட்டிற்கு அனுமதித்துள்ளது சட்ட நடைமுறையை தவறாக பயன்படுத்தலே தவிர வேறு ஒன்றும் இல்லை. அதேநேரத்தில், 1ம் மேல்முறையீட்டாளர்–நிறுவனத்திற்கு எதிரான வழக்கு நடவடிக்கைகளை

ரத்து செய்வதற்கான எந்த காரணிகளையும், எங்களால் காண முடியவில்லை. (பத்தி 9) [366–ஜி–எச்; 367–ஏ–இ; 368–ஏ–பி]

1.2. மேலும், 1 மற்றும் 2ம் எதிர்மனுதாரர்கள் சார்பில் தாக்கல் செய்த எதிருரை சங்கதிகள் மற்றும் கோப்பில் உள்ள இதர ஆவணங்களிலிருந்து, குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 202 மற்றும் இந்த சட்டம் பிரிவு 24 (4) ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ள நடைமுறையை பின்பற்றவில்லை என்ற மேல்முறையீட்டாளர்களின் வாதத்தை ஏற்றுக்கொண்டு, இந்த நிலையில் வழக்கு நடவடிக்கையை ரத்து செய்தவற்கு உண்டான எந்த வழக்கும் எழவில்லை என்றே நாங்கள் கருதுகிறோம். இந்த சட்டம் பிரிவு 24 (4)–ன் கீழான நடைமுறைகளைப் பொறுத்தவரை, 1ம் மேல்முறையீட்டாளர் நிறுவனம் 2வது மாதிரியை மத்திய பூச்சிக்கொல்லி சோதனை ஆய்வகத்திற்கு அனுப்புவதற்கு தேவையான வரைவோலையை வைப்பீடு செய்தபின்பு, சீரான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, குறிப்பிட்ட கால அளவான 30 நாட்களுக்குள் மத்திய பூச்சிக்கொல்லி சோதனை ஆய்வகத்தால் ஆய்வறிக்கை அனுப்பபட்டுள்ளது. அதேபோல், குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 202ன் கீழ் சொல்லப்பட்டுள்ள நடைமுறைகளை பொறுத்தவரை, புகார்தாரர் ஒரு பொது ஊழியராக அவரது அலுவலக பணியை நிறைவேற்றும் பொருட்டு அவர் குற்றமுறையீட்டை தாக்கல் செய்துள்ளார் என்பதை மனதில் நிறுத்திக்கொண்டு, அந்த நடைமுறையை காணவேண்டியுள்ளது. சட்டமன்றம், அதன் அறிவாற்றலால் பொது ஊழியரை வெவ்வேறு பீடத்தில் வைத்திருப்பது குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு

202 ன் விதிவிலக்கின் மூலம் தெரிய வருகிறது. குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதித்துறை நடுவரின் ஆள்வரை அதிகார வரம்பிற்கு வெளியே வசித்து வரும் வழக்குகளில், வழக்கை புலன் கொள்ளும் முன்பு மேற்கொள்ளப்படும் விசாரணை/புலன் விசாரணை ஆகியவற்றின் நோக்கமே, தேவையின்றி அப்பாவிகள் துன்புறுத்தப்படகூடாது என்பதை உறுதிபடுத்துவதாகும். குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 200 ன் விதிவிலக்கின்படி, பொது ஊழியர் தனது அலுவலக பணியை நிறைவேற்றும் பொருட்டு தாக்கல் செய்யும் குற்ற முறையீட்டினை பொறுத்து, நீதித்துறை நடுவர், அத்தகைய பொது ஊழியரிடம் வாக்குமூலம் பதிவு செய்யவேண்டிய அவசியம் இல்லை. மேலும், குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 293 ன்படி அரசு அறிவியல் வல்லுநரின் அறிக்கை சாட்சியமாக அனுமதிக்கத்தக்கது. பொது ஊழியரால் குற்ற முறையீடு தாக்கல் செய்யும்பட்சத்தில், அவ்வாறான சாட்சிகளை விசாரிப்பதில் இருந்து குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் விலக்களித்துள்ளது. இந்த வழக்கில், பூச்சிக்கொல்லி மருந்துகள் சட்டம் 1968 ன் கீழான அதிகாரத்தை செயல்படுத்தி 2 ம் எதிர்மனுதாரர்/பொது ஊழியர் அரசு ஆய்வகங்களால் வழங்கப்பட்ட அறிக்கைகள் உட்பட பல்வேறு ஆவணங்களையும் இணைத்து குற்ற முறையீட்டை தாக்கல் செய்துள்ளதால், ஆவணங்களால் ஆதரிக்கப்படும் அத்தகைய குற்ற முறையீட்டின் மீது நீதித்துறை நடுவர் அழைப்பாணை அனுப்புவதற்கு எப்போதும் அதிகாரம் உண்டு. எந்த சமயத்திலும், நீதித்துறை நடுவர் விசாரணை மேற்கொள்ளாமலும் புலன் விசாரணைக்கு உத்தரவிடாமலும், குற்றத்தை புலன் கொண்டுள்ளார் என்ற ஒரே காரணத்திற்காக வழக்கு நடவடிக்கை ரத்து செய்யப்படவேண்டும் என்ற கற்றறிந்த வழக்கறிஞர்

சமர்ப்பித்த வாதத்தில் எந்த தகுதியும் நாங்கள் காணவில்லை. இந்த நிலையில் மேல்முறையீட்டாளர்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டது என்பதை காட்டவில்லை என்பதால், குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 482ன் கீழான அதிகாரத்தை செயல்படுத்தின வழக்கு நடவடிக்கைளை ரத்து செய்வதற்கு அது ஒரு காரணி அல்ல. நிறுவனத்தின் மற்ற அனைத்து நியமனம் செய்யப்பட்ட/பொறுப்பான நபர்கள் ஏற்கனவே இந்த புகாரில் எதிரிகளாக உள்ளனர் என்பதால் 2ம் மேல்முறையீட்டாளர்/மேலாண்மை இயக்குநருக்கு எதிராக காட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை குற்ற வழக்கீடு செய்வதற்கு அடிப்படை எதுவும் இல்லை. (பத்தி 10,11) [368–பி–எச்; 369–ஏ–சி]

மேலாண்மை இயக்குநர் கேஸ்ட்ரால் இந்தியா லிட்

எதிர்

கர்நாடகா மாநிலம் மற்றும் ஒருவர் ***2018 (17) SCC 275;***

ஷிவ் குமார் ஜாடியா

எதிர்

என்.சி.டி. டெல்லி ***2019 (17) [2019] 11 SCR 210 – குறிப்பிடப்படுகிறது.***

மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் 1881 பிரிவு 138–ன் கீழான வழக்கு விசாரணைகளை விரைந்து முடிப்பதற்கான (தன்னிச்சையான நீதி பேராணை மனு (குற்றவியல்) எண்.2/2020) ***(2021) SCC ONLINE SC 325–வேறுபடுத்தப்பட்டது.***

<u>வழக்கு சட்ட குறிப்பு</u>

2018 (17) SCC 275 பத்தி 6 (a)ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

2019 (11) SCR 210 பத்தி 6 (a) ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: குற்ற மேல்முறையீடு எண்.750/2021.

சண்டிகாரில் உள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம் CRM–M No.12082/2016 வழக்கில் பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து இந்த மேல்முறையீடு.

மூத்த வழக்கறிஞர்கள் குரு கிருஷ்ணக்குமார்,
சித்தார்த் லூத்ரா, வழக்கறிஞர்கள் ஹரிகரன்,
நித்தின் தாதை, திருமதி. ஜெய் கிருத்தி எஸ்.ஜடேஜா,
திருமதி. சினேகா ரவி ஐயர் ... மேல்முறையீட்டாளர்களுக்காக

–எதிர்–

வழக்கறிஞர்கள் திருமதி ஜெஸ்பிரீத் கோகியா,
திருமதி. மந்தகினி சிங், கரன்வீர் கோகியா,
திருமதி. சிவாங்கி சிங்கால்,
திருமதி. அசிமா மண்ட்லா ...எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக

இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர். சுபாஷ்ரெட்டி அவர்களால் பகரப்பட்டது.

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. இந்த குற்ற மேல்முறையீடானது, கடந்த 12.05.2020 தேதியில் சண்டிகாரில் உள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம் CRM–M–12082–2016 (O&M) என்ற வழக்கில் வழங்கிய உத்தரவுக்கு எதிராக இந்த மனுதாரர்கள்/3 மற்றும் 4 எதிரிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி, உத்தரவின் படி, 2ம் எதிர்மனுதாரான பஞ்சாப் மாநில, டார்ன் டாரன் மாவட்டம், பிக்கிவிண்ட் தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளரால் 19.08.2015 தேதியில் பூச்சிக் கொல்லி மருந்துகள் சட்டம் 1968 (சுருக்கமாக "இந்த சட்டம்")ன் கீழ் பிரிவுகள் 3 (k) (i), 17, 18 மற்றும் 33–ன் படியான குற்றங்கள் மற்றும் பிரிவு 29 ன் கீழ் தண்டனைக்குரியவை என தாக்கல் செய்யப்பட்ட குற்ற முறையீடு எண். 313 ஐ ரத்து செய்யக் கோரி மனுதார்கள் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. சேமிப்புக் கிடங்கு பொறுப்பாளரான மற்ற எதிரியின் மனு உயர்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு அவரருக்கு எதிரான குற்ற முறையீடு ரத்து செய்யப்பட்டன.

3. இந்த 1ம் மேல்முறையீட்டாளர் மும்பையில் அலுவலகம் வைத்து பூச்சிக் கொல்லி மருந்து தயாரிப்பில் ஈடுபடும் நிறுவனமாகும். 2ம் மேல்முறையீட்டாளர் அந்த நிறுவனத்தின் முன்னாள் மேலாண்மை இயக்குனராக இருந்தவர். 31.12.2013 அன்று பஞ்சாப் மாநில, டார்ன் டரான் மாவட்டம், பிகிவிண்ட் தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர் அவர்கள் M/S டில்லான் கேதி கடை வளாகத்தில் அதன் ஒரே உரிமையாளர் ஸ்ரீ நிஸ்ஸான் சிங் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டார்.

மேற்சொன்ன ஸ்ரீ நிஸ்ஸான் சிங் என்பவர் 1ம் மேல்முறையீட்டாளர் நிறுவனத்தின் பூச்சிக் கொல்லி மருந்தை விற்பனை செய்வதில் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளராக இருத்தார். ஆய்வின் போது, அந்த வளாகத்தில், தலா 160 கிராம் எடை கொண்ட ஒவ்வொரு பெட்டிக்கும் 25 பாக்கெட் அடங்கிய 6 பெட்டியில் பைரோசோபாப் ப்ரோபனையில் (க்ளோனொபாப் ப்ரோபார்கில் 15% wp) இருப்பதை ஆய்வு செய்த அதிகாரி கண்டறிந்தார். மேற்சொன்ன சரக்கு இருப்பில் இருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டு அதில் ஒன்றை அம்ரிஸ்டாரில் உள்ள பூச்சிக்கொல்லி சோதனை ஆய்வக மூத்த பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டது. 15.01.2014 அன்று அந்த ஆய்வறிக்கை பெறப்பட்டபோது 15% என்று முகப்புச் சீட்டில் பெயரிடப்பட்ட அறிவிப்புக்கு மாறாக 11.72% அளவிற்கு மட்டுமே பைரோசோபாப் ப்ரோபனையிலின் செயலில் உள்ள மூலப்பொருள்கள் இருந்ததை கண்டறியப்பட்டது. அந்த ஆய்வறிக்கையின் நகலோடு, விளக்கம் கேட்பு அறிவிப்பும் அம்ரிஸ்டாரில் உள்ள விற்பனையாளருக்கு அனுப்பப்பட்டது. அந்த விற்பனையாளரால் தாக்கல் செய்யப்பட்ட விலைப் பட்டியலில் அவர் சம்மந்தப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்தை 1ம் மேல்முறையீட்டாளர் நிறுவனத்திடம் இருந்து விலைக்கு வாங்கியதாக காட்டப்பட்டுள்ளது. குஜராத்தில் பாரூச்சில் தயாரிப்பு அலகு கொண்ட 1ம் மேல்முறையீட்டாளர் நிறுவனத்திற்கும், அதன் பொறுப்பான மற்ற அதிகாரிகளுக்கும் விளக்கம் கேட்பு அறிவிப்பு அனுப்பப்பட்டது. அந்த அறிக்கையை பெற்றுக்கொண்டபின் இந்த வழக்கின் 2ம் மேல்முறையீட்டாளர் அந்த நிறுவனத்திற்கு பதிலாக, 27.03.2014 தேதியிட்ட கடிதம்

வாயிலாக மத்திய பூச்சிக்கொல்லி சோதனை ஆய்வகம், ஃபாரிதாபாத்திற்கு மற்றொரு மாதிரியை அனுப்புமாறு கோரிக்கை வைத்தார். தகுந்த கட்டணங்களை வைப்பீடு செய்த பின்பு, மற்றொரு மாதிரியை மத்திய பூச்சிக்கொல்லி சோதனை ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு, அந்த மாதிரியில் பையில் முகப்புச் சீட்டில் 15% என கண்டுள்ளதற்கு மாறாக 10.09% செயலில் உள்ள மூலப்பொருட்கள் மட்டுமே இருந்ததை கண்டறியப்பட்டதால் தவறான தொழிற்சின்னம் என அறிக்கை கொடுக்கப்பட்டது. தகுதி வாய்ந்த அதிகாரியிடம் முன் அனுமதி பெற்று மேல்முறையீட்டாளர்கள் மற்றும் இதர எதிரிகளுக்கு எதிராக பிரிவுகள். 3 (k) (i), 17, 18 மற்றும் 33 ன் கீழான குற்றங்களுக்காக அவர்களை பிரிவு 29 ன் கீழ் தண்டிக்க வேண்டி விசாரணை நடத்துவதற்கு ஒரு குற்ற முறையீட்டினை குற்றவியல் நீதித்துறை நடுவரிடம் தாக்கல் செய்யப்பட்டது.

4. பல்வேறு காரணங்களைக் கொண்டு, மேல்முறையீட்டாளர்கள் மற்றும் பிற எதிரிகள் அந்த குற்ற முறையீட்டினை இரத்து செய்யக்கோரி உயர்நீதிமன்றத்தை நாடினார். மேல்முறையீட்டாளர்களைப் பொறுத்தவரை மனுவை தள்ளுபடி செய்தும், சேமிப்புக்கிடங்கு காவலாளி மனுவை அனுமதித்தும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

5. மேல்முறையீட்டாளர்களுக்காக ஆஜரான கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் திரு. சித்தார்த் லூத்ரா, எதிர் மேல்முறையீட்டாளர்களுக்காக ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்

திருமதி. ஜஸ்பிரீத் கோசியா ஆகியோர்களின் வாதம் கேட்டறியப்பட்டது.

6. மேல்முறையீட்டாளர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இந்த சட்டப் பிரிவு 33 ஐ குறிப்பிட்டு, இந்த நிறுவனத்தால் தயாரிக்கக்கூடிய பூச்சிக்கொல்லி மருந்துகளின் தரத்தை பராமரிப்பதற்கு பொறுப்பாளர் மற்றும் பொறுப்பான அதிகாரிகளை நியமனம் செய்து, 28.12.2012 தேதியில் நிறுவனத்தின் கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானத்தையும் இணைத்து, எதிர்மனுதார்களிடம் 22.01.2013 அன்று மேல்முறையீட்டாளர்கள் ஏற்கனவே உத்தரவாத கடிதம் மேற்கொண்டுள்ளார்கள் எனவும், தெளிவற்ற மற்றும் மொட்டையான குற்றச்சாட்டுகளை வைத்துக்கொண்டு, இந்த மேல்முறையீட்டாளர்களான இந்த நிறுவனம் மற்றும் அதன் மேலாண்மை இயக்குநர்களையும், வழக்கு விசாரணைக்கு உட்படுத்த கோரப்படுகிறது எனவும் தனது வாதத்தை சமர்ப்பித்தார்.

6(a). மேல்முறையீட்டாளர்கள் வகித்த பங்குகளை குறித்து தெளிவான மற்றும் திட்டவட்டமான சங்கதிகள் குற்ற முறையீட்டில் குறிப்பிடாத பட்சத்தில் 1ம் மேல்முறையீட்டாளர் – நிறுவனம் மற்றும் 2ம் மேல்முறையீட்டாளர் – மேலாண்மை இயக்குநர் ஆகியோர்களுக்கு குற்ற செயலில் ஈடுபட்டதாக உள்ள குற்றசாட்டில் பகர பொறுப்பு இருக்க முடியாது எனவும், அவரது வாதத்திற்கு ஆதரவாக கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் இந்த நீதிமன்றத்தின்

தீர்ப்பான, ***மேலாண்மை இயக்குநர் கேஸ்ட்ரால் இந்தியா லிட் எதிர் கர்நாடகா மாநிலம் மற்றும் ஒருவர்***[1] மற்றும் இந்த நீதிமன்றத்தின் மற்றொரு தீர்ப்பான, ***வஜிவ் குமார் ஜாடியா எதிர் என்.சி.டி.டெல்லி***[2] ஆகியவற்றை மேற்கோள் காட்டினார்.

6(b). இந்த குற்ற முறையீட்டின் அடிப்படையிலான குற்றத்தை புலன் கொள்ளும் முன்பு கற்றறிந்த நீதித்துறை நடுவர் அந்த சட்டம் பிரிவு 24 (4) மற்றும் குற்றவிசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 202 ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றவில்லை என மேலும் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார். மேல்முறையீட்டாளர்கள் நீதித்துறை நடுவரின் ஆள்வரைக்குட்பட்டு வசிக்கவில்லை என்றபோதிலும், அவர் முறையான விசாரணையின்றியும், புலனாய்வுக்கு உத்தரவிடாமலும், குற்றத்தை புலன் கொண்டுள்ளார் எனவும், மேலும் இந்த மேல்முறையீட்டாளருக்கு எதிரான குற்ற வழக்கீடு சட்ட நடைமுறையை தவறாக பயன்படுத்தலே தவிர வேறு ஒன்றும் இல்லை. மேல்முறையீட்டாளர்களால் எழுப்பப்பட்ட பல்வேறு காரணங்களை உயர்நீதிமன்றம் சரியான கண்ணோட்டத்தில் கருதமால், குற்ற முறையீட்டை இரத்து செய்யக்கோரும் அவர்களது மனுவை தள்ளுபடி செய்து விட்டது. நீதித்துறை நடுவர் குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 202 ன் கீழான நடைமுறையை பின்பற்றவில்லை என்ற வாதத்திற்கு ஆதரவாக கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் இந்த நீதிமன்ற தீர்ப்பான ***மாற்றுமுறை ஆவணங்கள்***

1 . 2018(17) SCC 275

2 . 2019(17) SCC 193

சட்டம் 1881 பிரிவு 138–ன் கீழான வழக்கு விசாரணைகளை விரைந்து முடிப்பதற்கான (தன்னிச்சையான நீதிபேராணை மனு (குற்றவியல்) எண்.2/2020)[3] என்ற வழக்கை மேற்கோள் காட்டி வாதிட்டார்.

7. மறுபக்கம், எதிர்மனுதாரர்களின் கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர்களால் எழுப்பப்பட்ட அனைத்து காரணங்களையும் பரிசீலித்து குற்ற முறையீட்டு நடவடிக்கையை ரத்து செய்யக் கோரிய மனுவை தள்ளுபடி செய்துள்ளது என சமர்ப்பித்தார். 2ம் மேல்முறையீட்டாளர், 1ம் மேல்முறையீட்டாளர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக இருப்பதனாலும், அந்த நிறுவனம் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட பொருளை தயாரிப்பதாலும் 2ம் எதிர்மனுதாரரான பஞ்சாப் மாநிலம், டார்ன் டாரன், பிக்கிவிண்ட் தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளரால் சரியாக அவர்களை குற்ற வழக்கீட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது எனவும், இந்த சட்டப் பிரிவு 24 (4) மற்றும் குற்றவிசாரணை முறைச் சட்டம் பிரிவு 202 ஆகியவற்றில் கூறியுள்ள விதிகளை மீறவில்லை எனவும், உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் தலையிட காரணங்கள் இல்லை எனவும் சமர்ப்பிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட நேரத்தில் 2ம் மேல்முறையீட்டாளர் இந்த நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக இருந்துள்ளார் என்பதால் அவர்தான் அந்த நிறுவனம் தயாரிக்கும் பொருட்களுக்கு தரக் கட்டுப்பாட்டிற்கான பொறுப்பான நபர் என்பதால் அவரும் குற்ற வழக்கீட்டிற்கு பொறுப்புடையவர் என சமர்ப்பிக்கப்பட்டது.

3 .2021 SCC Online SC325

8. இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களும் கேட்கப்பட்டது, குறையுற்ற ஆணை மற்றும் கோப்பில் உள்ள இதர ஆவணங்களை நாங்கள் பார்வையிட்டோம்.

9. இந்த சட்டத்தின்படி பிரிவு 33, நிறுவனங்களால் இழைக்கப்படும் குற்றங்கள் பற்றி கையாள்கிறது. இந்த சட்டத்தின் பிரிவு 33 (1)–ஐ வாசிக்கையில், ஒரு நிறுவனத்தால் எப்போதெல்லாம் இந்த சட்டத்தின் கீழான குற்றங்கள் இழைக்கப்படுகிறதோ, அந்த குற்றங்கள் இழைக்கப்படும்போது யார் அந்த நிறுவனத்தின் வியாபாரத்திற்கு பொறுப்பாளராக இருந்தாரோ அல்லது பொறுப்பான நபராக இருந்தாரோ அவரும் அவரோடு சேர்ந்து அந்த நிறுவனமும் குற்றம் இழைத்தவர்களாக கருதப்பட வேண்டும் எனவும், அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொண்டு அதன்படி தண்டிக்கப்படவேண்டும் என்பதையும் தெளிவுறச் செய்கிறது. இந்த வழக்கில், 1ம் மேல்முறையீட்டாளர் நிறுவனத்தின் சார்பாக, அந்த நிறுவனத்தினரால் தயாரிக்கப்படும் பூச்சிக் கொல்லி மருந்துகளின் தரத்தை பராமரிப்பதற்கும், இந்த சட்டத்தின் கீழ் எந்த குற்ற செயலும் நடைபெறாமல் தடுப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து எடுப்பதற்கு உண்டான அனைத்து அதிகாரங்களையும் செயல்படுத்துவதற்கும், நிறுவனத்திற்கான பொறுப்பாளராக ஸ்ரீ மதுகர்.ஆர்.கைட் என்பவரை நிறுவனத்தின் மேலாளராக நியமனம் செய்ததை காட்டக்கூடிய, நிறுவனத்தால் கடந்த 28.12.2012 அன்று இயற்றப்பட்ட தீர்மானத்தை, 22.01.2013 அன்று 2ம் மேல்முறையீட்டாளர் – மேலாண்மை இயக்குநர்

உத்திரவாதக் கடிதம் கொடுத்துள்ளதில் மாற்றுக் கருத்து இல்லை. அவ்வாறு உறுதிமொழி கொடுத்ததைப் பற்றி தகராறு இல்லை. இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை பத்தி 5.10 ல் கூட, நிறுவனத்தின் அலுவல்கள், தரக் கட்டுப்பாடு முதலியவற்றிற்கு பொறுப்புள்ள நபர்களை நியமித்துள்ளதன் மூலம் 2 ம் மேல்முறையீட்டாளர் – மேலாண்மை இயக்குநர், 1 ம் மேல்முறையீட்டாளர் – நிறுவனம் இழைத்த குற்றங்களின் பொறுப்பிலிருந்து தப்பிக்க முடியாது என எதிர்மனுதாரர்களால் சொல்லப்பட்டுள்ளது. நிறுவனங்களால் இழைக்கப்படும் குற்றங்களை கையாளும் இந்த சட்டத்தின் குறிப்பிட்ட பிரிவினை காண்கையில், அது நிறுவனத்தின் வியாபார நடவடிக்கைக்கான பொறுப்பான நபரின் மீது பொறுப்பை சுமத்துவதால், 2 ம் மேல்முறையீட்டாளர் – மேலாண்மை இயக்குநர், இந்த நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக இருப்பதாலேயே, நிறுவனத்தின் வியாபார நடவடிக்கைகள், தரக் கட்டுப்பாடு முதலியவற்றிற்கெல்லாம் மொத்தமாக பொறுப்பாளர் என்ற பொத்தாம் பொதுவான மற்றும் தெளிவற்ற குற்றச்சாட்டுகளை வைப்பதனால், அதனடிப்படையில் அவரை குற்ற வழக்கீட்டிற்கு உட்படுத்த முடியாது. இந்த வழக்கில் நிறுவனத்தின் மேலாளர்களில் ஒருவரான திரு. மதுகர் ஆர்.சாகட் என்பவரை தீர்மானத்தின் வாயிலாக பொறுப்பு நிர்ணயித்து அதை 22.01.2013 அன்று உத்தரவாதக் கடிதம் வடிவில் 2 ம் மேல்முறையீட்டாளரால், எதிர்மனுதாரர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பொருட்களுக்கான தரக்கட்டுப்பாட்டிற்கு பொறுப்பு நிர்ணயித்து உத்தரவாதக் கடிதம் சமர்ப்பித்ததில்

மாற்றுக்கருத்து இல்லாதபோது, 2ம் மேல்முறையீட்டாளர் – மேலாண்மை இயக்குநரை, அவர் சம்பந்தப்பட்ட நேரத்தில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக இருந்தார் என்ற தெளிவற்ற மற்றும் மொட்டையான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் குற்ற வழக்கீட்டிற்கு உட்படுத்துவதில் எந்தவித காரணமோ, நியாயமோ இல்லை. இந்த சட்டத்தின் பிரிவு 33–ஐ வாசிக்கையில், அந்த நிறுவனமும் அதன் பொறுப்பான நபர் மட்டுமே இழைக்கப்பட்ட குற்றத்திற்கு குற்றவாளியாக கருதப்பட்டு, அவர்களுக்கு எதிராக வழக்கு நடவடிக்கை தொடர வேண்டும் என்பதை தெளிவுபடுத்துகிறது. நிறுவனத்தின் விவகாரங்களுக்கு மொத்தமாக மேலாண்மை இயக்குநர் பொறுப்பாளராக இருந்தாலும், அந்த அதிகாரியை குற்ற வழக்கீட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டுமா இல்லையா என்பது அந்தந்த வழக்கின் சூழ்நிலைகள் மற்றும் சங்கதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட சட்டப் பிரிவுகளை பொறுத்தது. இந்த சட்டத்தின் குறிப்பிட்ட பிரிவு 33–ஐ பொறுத்தும், இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள உத்திரவாதக் கடிதம் பொறுத்தும், 2ம் மேல்முறையீட்டாளரை குற்ற வழக்கீட்டிற்கு எதிர்மனுதாரர்கள் உட்படுத்த முடியாது. எனவே, 2ம் மேல்முறையீட்டாளர் – மேலாண்மை இயக்குநருக்கு எதிராக குற்ற வழக்கீட்டிற்கு அனுமதித்துள்ளது சட்ட நடைமுறையை தவறாக பயன்படுத்தலே தவிர வேறு ஒன்றும் இல்லை என்ற கற்றறிந்த வழக்கறிஞர் திரு. சித்தார்த் லூத்ராவின் வாதத்தில் உந்துதல் இருப்பதை நாங்கள் காண்கிறோம். அதே சமயம் 1ம் மேல்முறையீட்டாளர்– நிறுவனத்திற்கு எதிரான வழக்கு நடவடிக்கைகளை ரத்து

செய்வதற்கான எந்த காரணிகளையும், எங்களால் காண முடியவில்லை.

10. மேலும், 1 மற்றும் 2ம் எதிர்மனுதாரர்கள் சார்பில் தாக்கல் செய்த எதிர் உரை சங்கதிகள் மற்றும் கோப்பில் உள்ள இதர ஆவணங்களிலிருந்து, குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 202 மற்றும் இந்த சட்டம் பிரிவு 24 (4) ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ள நடைமுறையை பின்பற்றவில்லை என்ற மேல்முறையீட்டாளர்களின் வாதத்தை ஏற்றுக்கொண்டு, இந்த நிலையில் வழக்கு நடவடிக்கையை ரத்து செய்தவற்கு உண்டான எந்த வழக்கும் எழவில்லை என்றே நாங்கள் கருதுகிறோம். இந்த சட்டம் பிரிவு 24 (4)–ன் கீழான நடைமுறைகளைப் பொறுத்தவரை, 1ம் மேல்முறையீட்டாளர் நிறுவனம் 2வது மாதிரியை மத்திய பூச்சிக்கொல்லி சோதனை ஆய்வகத்திற்கு அனுப்புவதற்கு தேவையான வரைவோலையை வைப்பீடு செய்தபின்பு, சீரான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, குறிப்பிட்ட கால அளவான 30 நாட்களுக்குள் மத்திய பூச்சிக்கொல்லி சோதனை ஆய்வகத்தால் ஆய்வறிக்கை அனுப்பபட்டுள்ளது. அதேபோல், குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 202ன் கீழ் சொல்லப்பட்டுள்ள நடைமுறைகளை பொறுத்தவரை, புகார்தாரர் ஒரு பொது ஊழியராக அவரது அலுவலக பணியை நிறைவேற்றும் பொருட்டு அவர் குற்றமுறையீட்டை தாக்கல் செய்துள்ளார் என்பதை மனதில் நிறுத்திக்கொண்டு, அந்த நடைமுறையை காணவேண்டியுள்ளது. சட்டமன்றம், அதன் அறிவாற்றலால் பொது ஊழியரை வெவ்வேறு

பீடத்தில் வைத்திருப்பது குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 202 ன் விதிவிலக்கின் மூலம் தெரிய வருகிறது. குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதித்துறை நடுவரின் ஆள்வரை அதிகார வரம்பிற்கு வெளியே வசித்து வரும் வழக்குகளில், வழக்கை புலன் கொள்ளும் முன்பு மேற்கொள்ளப்படும் விசாரணை/புலன் விசாரணை ஆகியவற்றின் நோக்கமே, தேவையின்றி அப்பாவிகள் துன்புறுத்தப்படகூடாது என்பதை உறுதிபடுத்துவதாகும். குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 200 ன் விதிவிலக்கின்படி, பொது ஊழியர் தனது அலுவலக பணியை நிறைவேற்றும் பொருட்டு தாக்கல் செய்யும் குற்ற முறையீட்டினை பொறுத்து, நீதித்துறை நடுவர், அத்தகைய பொது ஊழியரிடம் வாக்குமூலம் பதிவு செய்யவேண்டிய அவசியம் இல்லை. மேலும், குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 293 ன்படி அரசு அறிவியல் வல்லுநரின் அறிக்கை சாட்சியமாக அனுமதிக்கத்தக்கது. பொது ஊழியரால் குற்ற முறையீடு தாக்கல் செய்யும்பட்சத்தில், அவ்வாறான சாட்சிகளை விசாரிப்பதில் இருந்து குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் விலக்களித்துள்ளது. இந்த வழக்கில், பூச்சிக்கொல்லி மருந்துகள் சட்டம் 1968 ன் கீழான அதிகாரத்தை செயல்படுத்தி 2 ம் எதிர்மனுதாரர்/பொது ஊழியர் அரசு ஆய்வகங்களால் வழங்கப்பட்ட அறிக்கைகள் உட்பட பல்வேறு ஆவணங்களையும் இணைத்து குற்ற முறையீட்டை தாக்கல் செய்துள்ளதால், ஆவணங்களால் ஆதரிக்கப்படும் அத்தகைய குற்ற முறையீட்டின் மீது நீதித்துறை நடுவர் அழைப்பாணை அனுப்புவதற்கு எப்போதும் அதிகாரம் உண்டு. எந்த சமயத்திலும், நீதித்துறை நடுவர் விசாரணை

மேற்கொள்ளாமலும் புலன் விசாரணைக்கு உத்தரவிடாமலும், குற்றத்தை புலன் கொண்டுள்ளார் என்ற ஒரே காரணத்திற்காக வழக்கு நடவடிக்கை ரத்து செய்யப்படவேண்டும் என்ற கற்றறிந்த வழக்கறிஞர் சமர்ப்பித்த வாதத்தில் எந்த தகுதியும் நாங்கள் காணவில்லை. இந்த நிலையில் மேல்முறையீட்டாளர்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டது என்பதை காட்டவில்லை என்பதால், குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 482ன் கீழான அதிகாரத்தை செயல்படுத்தலின் வழக்கு நடவடிக்கைகளை ரத்து செய்வதற்கு அது ஒரு காரணி அல்ல.

11. நிறுவனத்தின் மற்ற அனைத்து நியமனம் செய்யப்பட்ட/பொறுப்பான நபர்கள் ஏற்கனவே இந்த புகாரில் எதிரிகளாக உள்ளனர் என்பதால் 2ம் மேல்முறையீட்டாளர்/மேலாண்மை இயக்குநருக்கு எதிராக காட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை குற்ற வழக்கீடு செய்வதற்கு அடிப்படை எதுவும் இல்லை என்றே நாங்கள் கருதுகிறோம். கற்றறிந்த வழக்கறிஞர் திரு. சித்தார்த் லூத்ரா இந்த நீதிமன்ற தீர்ப்பான ***மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் 1881 பிரிவு 138–ன் கீழான வழக்கு விசாரணைகளை விரைந்து முடிப்பதற்கான (தன்னிச்சையான நீதி பேராணை மனு (குற்றவியல்) எண்.2/2020)*** மேற்கோள் காட்டியுள்ளார். அந்த வழக்கு மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் 1881ன் கீழான பிரிவுகள் சம்பந்தமானவை என்பதால் இந்த வழக்கு சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும் பொறுத்து அதுவும், இந்த நிலையில் மேல்முறையீட்டாளர்களுக்கு உதவியாக இல்லை.

12. மேற்கூறிய காரணங்களுக்காக 2ம் மேல்முறையீட்டாளர்–மேலாண்மை இயக்குநரை பொறுத்தவரை இந்த குற்ற மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டு CRM–M–12082–2016 (O&M) வழக்கில் 12.05.2020ம் தேதியில் சண்டிகாரில் உள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு நீக்கரவு செய்யப்படுகிறது. அதன் விளைவாக, 2ம் எதிர்மனுதாரர் – பஞ்சாப் மாநில, தார்கள் தாரன் மாவட்ட பிக்கிவிண்ட் தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர் 19.08.2015 தேதியில் தாக்கல் செய்து கற்றறிந்த நீதித்துறை நடுவர், பட்டி முன்பாக உள்ள குற்ற முறையீடு எண்.313 2ம் மேல்முறையீட்டாளர் திரு. பிரமோத். என். கர்லேக்கர்/4ம் எதிரி என்ற முறையில் ரத்து செய்யப்படுகிறது. மேலும், இந்த உத்தரவில் உள்ள கூர்நோக்குகள் மற்றும் தீர்வுகள், வழக்கு நடவடிக்கையை ரத்து செய்யகோரும் இந்த மனுவின் மூலம் ஏற்பட்ட மேல்முறையீட்டை முடிவு செய்யும் நோக்கில் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவுபடுத்தப்படுகிறது. விசாரணை நீதிமன்றம் கோப்பில் உள்ள சாட்சியங்கள் மற்றும் அதற்கான இதர நடவடிக்கைகள் எடுத்ததன் அடிப்படையில் சட்டப்படி அதன் சொந்த தீர்மானத்திற்கு வரலாம்.

மேல்முறையீடு ஓரளவு அனுமதிக்கப்படுகிறது.

பொறுப்புத் துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."